**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06**

**ந.க.எண். 32841/ எம்1/ இ1/2025, நாள்:02.07.2025**

**பொருள்:** பள்ளிக் கல்வி -2025–26 - "மகிழ் முற்றம்" மாணவர் குழு– அரசுப் பள்ளிகளில் மாணவர் செயல்பாடுகள்– வழிகாட்டு நெறிமுறைகள்–நடவடிக்கை –சார்ந்து.

**பார்வை:**

1. மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் எண்.4.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்:032841/எம்1/ இ1/2024 ,நாள்:01.10.2024
3. பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்000882/எம்1/இ1/2025நாள் 26.05.2025.

------

2024–25 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில், பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அனைத்து பள்ளிகளிலும் 'மகிழ் முற்றம்' எனும் மாணவர் குழு (House System) அமைப்பு செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கடந்த 2024–25 கல்வியாண்டில், மாநிலத்தின் அனைத்து அரசு பள்ளிகளிலும் 'மகிழ் முற்றம்' மாணவர் குழு (House System) திட்டம், கல்விசார்/கல்விசாரா செயல்பாடுகளை கல்வி முன்னேற்றத்துடன் ஒருங்கிணைத்து, மாணவர்களின் கற்றல் விளைவுகளை

Scanned with OKEN Scanner

மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான "வருடத்தின் வெற்றிக் குழு" (House of the Year) EMIS இல் பதிவான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி,

- தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் "குறிஞ்சி" மாணவர் குழுவும்,
- மேல்நிலைப்பள்ளிகளில் "முல்லை" மாணவர் குழுவும்,

2024-25 ஆம் கல்வியாண்டின் வெற்றிக் குழுக்களாக (House of the Year) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைமைத் திறன், குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமை இல்லாத ஒற்றுமை போன்ற மதிப்புகளை வளர்க்கும் 'மகிழ் முற்றம்' மாணவர் குழு அமைப்பு, மாணவர்கள் தங்களின் பள்ளி நிகழ்வுகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு, எதிர்காலத்திற்கான திறன்களை வளர்த்துக்கொள்ள உதவும் ஒரு தளமாக செயல்பட்டு வருகிறது. அத்தகைய மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பின் **நோக்கங்கள்** பின்வருமாறு:

- மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுத்துதல்
- மாணவர்களின் ஊக்கம் மற்றும் பங்களிப்பை அதிகரித்தல்
- மாணவர்கள் விடுப்பு எடுப்பதை குறைத்தல்
- ஒற்றுமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவித்தல்

Scanned with OKEN Scanner

- அனைத்து மாணவர்களுக்குமான வாய்ப்புகளை உருவாக்குதல்
- நேர்மறை நடத்தைகளை வலுவூட்டுதல்
- தலைமைத்துவ பண்பினை வளர்த்தல்
- ஆசிரியர் மாணவர் உறவை மேம்படுத்துதல்

மேற்கூறிய சிறப்பான நோக்கங்களை கொண்ட திட்டத்தினை, 2025-26 கல்வியாண்டிலும், வெற்றிகரமாக செயல்படுத்த, பின்வரும் விதிமுறைகளை அனைத்து பள்ளிகளும் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அனைத்து பள்ளிகளும் EMIS-ல் உள்ள "Allocate" பொத்தானைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு குழுக்களை ஒதுக்க வேண்டும்.
2. ஒவ்வொரு மாணவர் குழுவிலும், அப்பள்ளியின் உயர் வகுப்பிலிருந்து இருவர் மாணவர் தலைவர்களாக (House Captains) தேர்ந்தேடுக்கப்பட வேண்டும். இருபாலரும் பயிலும் பள்ளிகளில், ஒரு மாணவனும் ஒரு மாணவியும் மாணவர் தலைவர்களாக இருக்க வேண்டும். 'துணை கேப்டன்' பதவி இந்த திட்டத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களிடையே சமமான பங்களிப்பை வளர்த்து, அனைவரையும் உள்ளடக்கிய சூழலை உருவாக்கி, ஒற்றுமையை மேம்படுத்துவதே இந்த மாணவர் தலைவர்களின் (House Captains) முதன்மையான கடமையாகும். எனவே, சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் பாலினம் உறுதிசெய்யப்படாத மாணவர்கள் இருப்பின்

Scanned with OKEN Scanner

அவர்களுக்கு மாணவர் தலைவர்களாக செயல்பட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

3. 'மகிழ் முற்றம்' கையேட்டில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, பதவியேற்பு விழாவிற்கு முன்னதாகவே மாணவர் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (School House Teacher Coordinator), மாணவர் குழுவின் பொறுப்பாசிரியர்கள் (House Head Teachers), மாணவர் குழுவின் மாணவர் தலைவர்கள் (House Captains), மாணவர் குழுவின் வகுப்பு தலைவர்கள் (House Class Leaders) ஆகியோர் தேர்வு செய்யப்படுதல் வேண்டும். "மகிழ் முற்றம்" கையேட்டினை இந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள (இணைப்பு 1) QR குறியீடு மூலம் பயனாளர்களின் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. **ஜூலை 11, அன்று**, ஆசிரியர்கள் மற்றும் மாணவர் தலைவர்கள் பதவியேற்பு விழாவானது இணைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலை (இணைப்பு–2) பின்பற்றி நடத்தப்படுதல் வேண்டும்.

5. மகிழ் முற்றம் பதவியேற்பு விழாவின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் தலைவர்கள், வகுப்பு தலைவர்கள், குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் மற்றும் பொறுப்பாசிரியர்கள் ஆகியோருக்கு அடையாளப் பதக்கங்களை (badges) பள்ளியின் தலைமை ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.

6. பள்ளிகளில் 5 மாணவர் குழுக்களுக்கான (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) கொடிகளை தயார் நிலையில் வைத்து, அதனை மகிழ் முற்றம் பதவி

Scanned with OKEN Scanner

ஏற்பு விழாவின் போது சார்ந்த குழு மாணவர் தலைவர்கள் ஏந்தி அவர்களின் குழு பிரதிநிதியாக தங்களை முன்னிறுத்தி அணிவகுக்க வேண்டும்.

7. மகிழ் முற்றம் மாணவர் குழு (House System) அமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களின் முக்கியதுவத்தை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆழமாக உணர்ந்துகொள்ளும் வகையில், மகிழ் முற்றம் பதவியேற்பு விழாவின் போது மாணவர் குழு அமைப்பின் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர், அவற்றை வாசிக்க, குழு பொறுப்பாசிரியர்கள், மாணவர் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் மற்றும் பள்ளியில் உள்ள அனைவரும் அவரை பின்தொடர்ந்து கூறி உறுதி மொழி ஏற்க வேண்டும்.

8. EMIS தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள குறிக்கோள் விளக்கும் சுவரொட்டியை (இணைப்பு 3) அச்சிட்டு, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எளிதாகக் காணக்கூடிய இடங்களில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

9. அனைத்து பள்ளிகளிலும், அனைவரும் பார்க்கும்படி பள்ளி அளவிலான மகிழ் முற்றம் மாணவர் குழுவின் மதிப்பெண் அட்டவணை (House System School Level Scoreboard) (இணைப்பு 4) காட்சிப்படுத்தப்பட்டு, மாதந்தோறும் மாணவர் குழுவின் மதிப்பெண்கள் மாணவர் குழு அமைப்பின் ஆசிரிய ஒருங்கிணைப்பாளரால் பதிவு செய்யப்பட்டு முறையாக பரிமாரிக்கபடுதல் வேண்டும்.

10. அத்துடன், ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் வகுப்பறை அளவிலான மதிப்பெண் அட்டவணை (House system classroom level scoreboard) (இணைப்பு 5)

Scanned with OKEN Scanner

வகுப்பாசிரியரின் மேற்பார்வையில் வகுப்பு குழுத் தலைவர்களால் பராமரிக்கப்பட வேண்டும். இவ்வாறு வெளிப்படையாகக் காட்சிப்படுத்தப்படும் இந்த மதிப்பெண் அட்டவணைகள், மாணவர்கள் தங்கள் குழுவின் முன்னேற்றத்தை முழுமையாக அறிந்துகொள்ள உதவும். அவர்களை மேலும் முனைப்புடனும், ஆர்வத்துடனும் பங்கேற்கவும் பங்களிக்கவும் ஊக்குவித்து, குழு உணர்வை நிலைநிறுத்த பெரிதும் துணைபுரியும்.

**வகுப்பறை அளவிலும் மற்றும் பள்ளி அளவிலும் மாணவர் குழுக்களுக்கான மதிப்பெண் கணக்கீட்டு முறை**

1. பள்ளி அளவில் EMIS இல் உள்ளிடப்படும் பின்வரும் தரவுகளின் அடிப்படையில் கணக்கீடு மேற்கொள்ளபடுகிறது.
    - வருகை சதவீதம் வாராந்திர அடிப்படையில் கணக்கிடப்படும்.
    - பருவத் தேர்வு மதிப்பெண்கள் - 6 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு காலாண்டிற்க்கு ஒரு முறை கணக்கிடப்படும்.
    - மன்றச் செயல்பாடுகள் - மன்றச் செயல்பாடுகள் நடக்கும் காலங்கள் அடிப்படையில் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் தரவுகளிலிருந்து கணக்கிடப்படும்.
    - கலைத்திருவிழா செயல்பாடுகள் - கலைத்திருவிழா செயல்பாடுகள் நடக்கும் காலங்கள் அடிப்படையில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் தரவுகளிலிருந்து கணக்கிடப்படும்.

2. மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் EMIS வலைத்தளம் "மாதத்தின் வெற்றி குழு"வினை (House of the Month)

Scanned with OKEN Scanner

அறிவிக்கும். வெற்றி பெற்ற குழுவின் கொடி EMIS இல், மகிழ் முற்றம் மாணவர் குழு (House System) முகப்புப் பக்கத்தில் அறிவிக்கப்படும்.

3. EMIS வலைத்தளத்தில் கணக்கிடப்படும் செயல்பாடுகள் மட்டுமல்லாது, பள்ளிகளும் அவர்களின் தேவைக்கேற்ப கூடுதலாக, வீட்டுப்பாடம் முடித்தல், காலை வணக்கக் கூட்டத்தில் மாணவர்களின் பங்கேற்பு, சுத்தம் மற்றும் சுகாதாரம், ஒழுக்கம், நேரம் தவறாமை, சுற்றுசூழல் மன்றச் செயல்பாடுகள், தலைமைப்பண்பு, விளையாட்டு போட்டிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகளை, மாதத்தின் முதல் திங்கட்கிழமைகளில் "மகிழ் முற்றம் – பள்ளி வழிகாட்டுதல் குழு (School House System Committee)" கூட்டம் நடத்தி கலந்தாலோசித்து தேர்வு செய்யவேண்டும். இந்தக் குழுவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் (Head Master), "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பின் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (school house system teacher coordinator), மாணவர் குழு பொறுப்பாசிரியர்கள் (House Head teachers), மற்றும் மாணவர் தலைவர்கள் (House Captains) ஆகியோர் இருப்பர். இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

- மாணவர் குழு (House System) செயல்பாடுகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
- மாணவர் குழு அமைப்பின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை மீண்டும் நினைவூட்டி, அனைவரும் அதை நோக்கி செயல்படுவதை உறுதி செய்தல்.

Scanned with OKEN Scanner

- எதிர்வரும் மாதத்திற்கான செயல்பாடுகளை திட்டமிடல்.

4. "மகிழ் முற்றம் – பள்ளி வழிகாட்டுதல் குழு (School House System Committee)" மூலம் தேர்வு செய்யப்பட்ட செயல்பாடுகளுக்கும், பின்வரும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், வகுப்பறை அளவிலும், பள்ளி அளவிலும் மகிழ் முற்றம் மாணவர் குழுக்களுக்கு வாராந்திர மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவை மதிப்பெண்கள் அட்டவணையில் (Classroom level scoreboard) முறையே பதிவு செய்யப்பட வேண்டும்.

| வகுப்பறை அளவில் | பள்ளி அளவில் |
|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகளில் குழுவின் வாராந்திர செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு, மாணவர் குழுக்கள் 1 முதல் 5 வரை தரவரிசைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு 2,4,6,8 மற்றும் 10 என்று முறையே புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். 2, 4, 6, 8, 10 என்ற எண்களை தவிர வேறு எண்கள் புள்ளிகளாக வழங்கப்பட கூடாது. | பள்ளி அளவில், அனைத்து வகுப்பறை மதிப்பெண் பட்டியலையும் (Classroom level scoreboard) ஒன்றாக தொகுத்து, மாணவர் குழுக்களை 1 முதல் 5 வரை தரவரிசைப்படுத்த வேண்டும். |
| எ. கா.: "வீட்டு பாடம்" முடித்தல் செயல்பாட்டில், அந்த வாரத்தில் "பாலை மாணவர் குழு" மற்ற குழுக்களை காட்டிலும் சிறப்பாக செயல்பட்டிருந்தால், அவர்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும். "பாலை குழுவிற்கு" அடுத்த சிறப்பாக செயல்பட்ட குறிஞ்சி மாணவர் குழுவிற்க்கு 8 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின் வரிசையில் உள்ள குழுக்களுக்கு 6, 4 மற்றும் 2 புள்ளிகள் முறையே வழங்கப்பட வேண்டும். | அதிக மதிப்பெண் பெற்றிருக்கும் குழுவிற்கு 10 புள்ளிகளும், அடுத்தடுத்த குழுக்களுக்கு 8,6,4 மற்றும் 2 புள்ளிகளும் வழங்கப்பட வேண்டும்.<br>2, 4, 6, 8, 10 என்ற எண்களை தவிர வேறு எண்கள் புள்ளிகளாக வழங்கப்பட கூடாது. |

Scanned with OKEN Scanner

2 மாணவர் குழுக்கள் சிறப்பாக செயல் பட்டிருந்தால், அவர்களுக்கு சமமான புள்ளிகள் வழங்கப்படலாம்.

4. மாணவர் குழு அமைப்பின் வகுப்பு தலைவர்கள், இந்த ஆவணத்துடன் இனைக்கப்பட்டுள்ள மாதிரி மதிப்பெண் படிவங்களை (இணைப்பு 6) பயன்படுத்தி அவர்கள் குழுவின் தினசரி மதிப்பெண்களை பதிவு செய்ய வேண்டும். மேலும் பதிவேற்றப்பட்ட தினசரி மதிப்பெண் படிவங்களை வகுப்பின் மதிப்பெண் பட்டியலுடனோ (Classroom level scoreboard) அல்லது மாணவர்கள் கண்களில் படும்படியோ காட்சிப்படுத்தலாம். இது மாணவர்கள், அவர்களின் தினசரி செயல்பாடுகளை சுயசரிபார்ப்பு செய்து மீதம் இருக்கும் வார நாட்களில் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும்.

| வகுப்புக் குழு அமைப்பின் தலைவர் | குழு அமைப்பின் பொறுப்பாசிரியர் | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகளுக்கான தினசரி மதிப்பெண்களை வழங்கப்பட்டுள்ள" Class Room Leader Scoreboard" (இணைப்பு 6) பயன்படுத்திப் பதிவுசெய்ய வேண்டும். | தங்கள் குழுக்களுக்கான (Houses) வாராந்திர மதிப்பெண்களை, பள்ளியின் அனைத்து வகுப்பு ஆசிரியர்களிடமிருந்து பெற வேண்டும். | அனைத்து மாணவர் குழு பொறுப்பாசிரியர்களிடமிருந்தும் (House Head Teachers) குழு வாரியான மதிப்பெண் பட்டியலை பெற வேண்டும். |
| அனைத்து மாணவர்களும் பார்க்கும் வகையில், வகுப்பு அளவிலான மதிப்பெண் பட்டியலை (classroom –level | பெறப்பட்ட மதிப்பெண்களை சரிபார்த்து, | பெறப்பட்ட குழு வாரியான மதிப்பெண் பட்டியலை பள்ளி |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| scoreboard) தினசரி அடிப்படையில் புதுப்பிக்க வேண்டும்.<br><br>ஒவ்வொரு வாரத்தின் கடைசி வேலை நாளில் புதுப்பிக்கப்பட்ட "Class Room Leader Scoreboard" வகுப்பு ஆசிரியர்களிடம் (Class Teachers) சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>வகுப்பு ஆசிரியர்கள் தங்களிடம் கொடுக்கப்பட்ட "Class Room Leader Scoreboard" இல் இருக்கும் மதிப்பெண்களை சரிபார்த்து, குழு பொறுப்பாசிரியர்களிடம் ஒப்படைக்க வேண்டும். | ஒன்றிணைத்து, மாணவர் குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (House System Teacher Coordinator) அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். | அளவில் ஒன்றிணைத்து, மொத்த வாராந்திர மதிப்பெண் அடிப்படையில் மாணவர் குழுக்குளை தரவரிசைப் படுத்த (rank) வேண்டும்.<br><br>ஒவ்வொரு வாரத்தின் கடைசி வேலை நாளில் பள்ளி அளவிலான புள்ளிகள் அட்டவணையை (school-level scoreboard) மாணவர் தலைவர்கள் உதவியுடன் புதுப்பிக்க வேண்டும். |

பள்ளியின் "மாணவர்குழு அமைப்பு" வழிகாட்டுதல் குழு (School "house system" committee)" கூட்டங்கள் மூலம் தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்ட செயல்பாடுகளின் வகுப்பறை அளவிலான மதிப்பெண்களை, பள்ளி அளவில் ஒன்றிணைத்து, மாணவர் குழுக்களை தரவரிசை படுத்தும்போது பொறுப்பாசிரியர்களும், குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளரும் கவனத்தில் கொள்ள வேண்டிய தகவல்கள்:

Scanned with OKEN Scanner

- அனைத்து வகுப்பறைகளும் ஒரே எண்ணிக்கையிலான செயல்பாடுகளை செயல்படுத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உதாரணமாக: ஒரு வகுப்பறையில் 2 செயல்பாடுகள் செயல்படுத்தி இருக்கலாம், மற்றொன்றில் 1 அல்லது 3 அல்லது அதற்கும் மேற்பட்ட செயல்பாடுகளையும் செயல்படுத்தி இருக்கலாம்.

- இந்த வேறுபாடுகள் இருந்தாலும், அனைத்து குழுக்களுக்கும், பள்ளி அளவில் சரிவிகிதத்தன்மையில் மதிப்பெண்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், வகுப்பறை அளவில் மாணவர் குழுக்கள் பெற்ற மதிப்பெண்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு ஒன்றிணைத்து அதிக மதிப்பெண்கள் பெரும் குழுவிற்க்கு 10 புள்ளிகளும், அதற்க்கு அடுத்து அதிக மதிப்பெண்கள் பெரும் குழுவிற்க்கு 8 புள்ளிகளும், அதற்கு அடுத்தடுத்து வரும் குழுக்களுக்கு 6, 4, 2 என்று முறையே புள்ளிகள் ஒதுக்கப்பட்டு தரவரிசைப்படுத்த வேண்டும்..

- EMIS இல் "மாதத்தின் வெற்றிக்குழு" (House of the Month) மற்றும் "வருடத்தின் வெற்றிக்குழு" (House of the Year), EMIS மூலம் கண்காணிக்கப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அறிவிக்கப்படும். சில நேரங்களில், EMIS தரவுகளின் அடிப்படையில் வெற்றி பெறும் குழு, பள்ளி அளவில் செய்யப்படும் செயல்பாட்டுகளின் ஒட்டுமொத்த கணக்கீட்டிலிருந்து மாறுபடலாம். இத்தகைய சூழ்நிலைகளில், பள்ளி அளவிலான செயல்பாடுகளின் தரவுகளையும் கணக்கில் கொண்டு மாதத்தின் மற்றும் வருடத்தின் வெற்றி குழுவை பள்ளி அறிவிக்க வேண்டும்.

Scanned with OKEN Scanner

- ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்கள் ஒரே மதிப்பெண்களைப் பெரும் சூழ்நிலைகளும் ஏற்படலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்கள் மாதத்தின் வெற்றி குழுக்களாக அறிவிக்கப்படலாம்.

- பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மாணவர் குழு ஆசிரிய ஒருங்கினைப்பாளர் (HSTC – House System Teacher Coordinator) மற்றும் மாணவர் குழு பொறுப்பாசிரியர்கள் (HHTs – House Head Teachers) மாணவர் தலைமையிலான முன்முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும். அந்த முன்முயற்சிகள் பள்ளியின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் அமைய வேண்டும். இதன் மூலம் மாணவர்களிடையே தொடர் ஈடுபாட்டையும், தலைமைத்துவ பண்பு மேம்படுவதையும் உறுதி செய்ய முடியும்.

**மகிழ் முற்றம் சார்ந்த பயிற்சி அமர்வுகள்**

1. மாவட்டங்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களின் (CEOs) வழிகாட்டுதலின் கீழ், அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் (HMs) மற்றும் மகிழ் முற்றம் மாணவர் குழு (House System) ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் (HSTC), மாணவர் குழு அமைப்பினை (House System) திறம்படச் செயல்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகளை, மாவட்ட/வட்டார அளவில் நடத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. "மகிழ் முற்றம்" மாணவர் குழு திட்டத்தினை அனைத்து பள்ளிகளிலும் திறம்பட செயல்படுத்துவதற்கும், அதனை மேம்படுத்துவதற்க்கும் வட்டார மற்றும் மாவட்ட வழிகாட்டுதல் குழு ஏற்பாடு செய்யும் பயிற்சி வகுப்புகளில், மாவட்ட ஆய்வாளர்கள் (DI), மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DC), தலைமையாசிரியர்கள் (HM) மற்றும்

Scanned with OKEN Scanner

மாணவர் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்கள் (HSTC) ஆகிய முக்கியப் பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். மகிழ் முற்றம் மாணவர் குழு செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாவட்ட மீளாய்வு கூட்டத்தில் ஆய்வு செய்து தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவார்.

**வழிகாட்டுதல் குழுவின் விவரங்கள் பின்வருமாறு,**

- மாவட்ட வழிகாட்டுதல் குழுவில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் – தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி, கூடுதல் திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், துணை ஆய்வாளர், தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 4 தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

- வட்டார வழிகாட்டுதல் குழுவில் வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வள ஆசிரியர் பயிற்றுனர்கள், வெவ்வேறு பள்ளிகளை சேர்ந்த 3 தலைமை ஆசிரியர்கள், மாணவர் குழுக்களின் பொறுப்பாசிரியர்கள், 5 வெவ்வேறு பள்ளிகளை சேர்ந்த மாணவர் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்கள், மாணவர் குழுக்களின் மாணவ தலைவர்கள், ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

Scanned with OKEN Scanner

வழிகாட்டுதல் குழுவின் பொறுப்புகள்

**1. தொடர் ஆய்வு, மதிப்பீடு மற்றும் வழிகாட்டுதலுக்கான கூட்டங்களை நடத்துதல்:**

மகிழ் முற்றம் மாணவர் குழு திறம்பட செயல்படுவதையும் மற்றும் தொடர்ந்து மேம்படுவதையும் உறுதிபடுத்த, தொடர் ஆய்வு கூட்டத்தை உரிய கால இடைவெளியில் நடத்துதல் வேண்டும்.

- மாவட்ட வழிகாட்டுதல் குழுவினர், தொடர் ஆய்வு மற்றும் மதிப்பீட்டு செயல்முறைக்காக ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் கூடி, இத்திட்டத்தின் செயல்திறனை ஆய்வுசெய்து, அதனை மேலும் மேம்படுத்துவதற்க்கான திட்டன்களை வகுத்தல் வேண்டும்.

- வட்டார வழிகாட்டுதல் குழு, மாதத்தின் இரண்டாவது வாரம், பொதுவாக புதன் கிழைமைகளில் மாதாந்திர கூட்டத்தினை நடத்துவர். பள்ளி அளவிலான தகவலின் அடிப்படையில், மாணவர் குழு அமைப்பின் ஒருங்கினைப்பாளர்கள் (HSTC), மாணவர் குழு அமைப்பின் பொறுப்பாசிரியர்கள் (HHT), மாணவர் குழு அமைப்பின் வகுப்பு தலைவர்கள் (House Class Leaders) மற்றும் மாணவர் குழு தலைவர்கள் (House Captains) ஆகியோர் அவர்களின் பொறுப்புகளை எவ்வாறு திறம்பட கையாள்வது, ஒன்றிணைந்து சவால்களுக்கான தீர்வுகளை கண்டறிவது பள்ளி அளவிலான செயல்திட்டங்கள் மற்றும் தகவல் அமைப்புகளை திட்டமிடுவது ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு இந்தக் கூட்டங்கள்நடத்தபடுதல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

2. பள்ளி பார்வை மேற்கொள்ளுதல்

- வட்டார மற்றும் மாவட்ட அளவிலான வழிகாட்டுதல் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள், மகிழ் முற்றம் மாணவர் குழு அனைத்து அரசு பள்ளிகளிலும் நடைமுறை படுத்தபடுவதை பள்ளிப் பார்வையின் போது ஆய்வு செய்தல் வேண்டும்.

3. பள்ளிகளுக்கான கருத்தரங்கங்களை நடத்துதல்

- இந்த திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டு, மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET) அவர்களின் கருத்துக்களை கேட்கவும், அவர்களின் பள்ளிகளில் திறம்பட செயல்படுத்திய செயல்பாடுகளை பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் தேவைக்கேற்ப புதிய செயல்முறைகளை திட்டமிடவும் இணைய வழி அல்லது நேரடி கருத்தரங்குகளை நடத்தி அதனை முறையாக ஆவணப்படுத்தி முதன்மைக் கல்வி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. சிறந்த பள்ளிகளுக்கான அங்கிகாராங்களை வழங்குதல்

- தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அவர்களின் வெற்றிகள் மற்றும் சவால்களை முன்வைக்க, வழிகாட்டுதல் குழு கூட்டங்களில் வாய்ப்புகள் வழங்கபடுதல் வேண்டும்.

- மாணவர்களும், ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் மற்றும் பள்ளிகளும், "மகிழ் முற்றம்" மாணவர் குழு அமைப்பினை திறம்பட நடைமுறைபடுத்தவும்,

Scanned with OKEN Scanner

ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை அவர்களுக்குள் உருவாக்கவும், திறம்பட செயல்படுபவர்களை அடையாளப்படுத்தவும், அங்கீகரிக்கவும், வழிகாட்டுதல் குழு வாய்ப்புகளை அமைத்து கொடுத்தல் வேண்டும்.

- மாவட்ட அளவில் ஆசிரியர் பயிற்றுநர்கள் ,வட்டாரக் கல்வி அலுவலர், மாவட்டக்கல்விஅலுவலர்(தொடக்கக்கல்வி),மாவட்டக்கல்விஅலுவலர்(இடை நிலை) ,முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் "மாதத்தின் சிறந்த பள்ளி" மற்றும் "வருடத்தின் சிறந்த பள்ளி" ஆகியவற்றை தேர்ந்தெடுத்து அங்கிகரித்தல் வேண்டும்.

5. தகவல் அடிப்படையிலான முடிவுகள் மற்றும் செயல்திட்டங்களை முன்னெடுத்தல்

- வழிகாட்டுதல் குழு, மகிழ் முற்றம் மாணவர் குழுவின் மாதாந்திர தரவுகளை ஆராய்ந்து அதன்மூலம் கண்டறியப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சரியான செயல்திட்டங்களை முன்னெடுக்க உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

**பள்ளியின் ஆண்டுவிழா**

ஆண்டு விழா என்பது கல்வியாண்டு முழுவதும் மாணவர்களின் கூட்டு முயற்சிகள் மற்றும் சாதனைகளைக் கொண்டாடும் ஒரு அங்கீகார மேடையாகச் செயல்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

மன்ற நிகழ்வுகள் (Club events), கலைத்திருவிழா, மாணவர் பாராளுமன்றம் மற்றும் பள்ளி அளவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்று சிறப்பாக செயல்பட்டதன் மூலம் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படும் ஒரு வாய்ப்பாக ஆண்டு விழா அமைய வேண்டும்.

ஆண்டுவிழாவின் போது மேற்கூறிய அனைத்துச் செயல்பாடுகளிலும் ஒட்டுமொத்த செயல்திறனின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஆண்டின் வெற்றிக் குழு' (House of the Year) கௌரவிக்கப்பட்டு, சுழற்கோப்பை (Rolling Trophy) வழங்கப்பட வேண்டும். இந்த அங்கீகாரம், மாணவர்களின் தலைமைத்துவம், குழுப்பணி மற்றும் சமூக பொறுப்பு போன்றவற்றை வளர்ப்பதில் மகிழ் முற்றத்தின் தொடர்ச்சியான பங்களிப்பைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளபடுதல் வேண்டும்.

**செயல்பாட்டு நிரல்படம்**

| திட்டம் | செயல்பாடு | ஜுன் | ஜுலை | ஆக் | செப் | அக் | நவ | டிச | ஜன | பிப் | மார்ச் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மகிழ் முற்றம் | ஒவ்வொரு மாணவர் குழுவிற்க்கும் மாணவர்களை ஒதுக்கீடு செய்வது. | | | | | | | | | | |
| | மாணவர் குழுக்களுக்கான | | | | | | | | | | |

Scanned with OKEN Scanner

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குழுத்தலைவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான பதவி ஏற்பு விழாவை நடத்துவது. | | | | | | | | | | |
| | மாதாந்திர மாணவர் குழு அமைப்பு கூட்டம். | | | | | | | | | | |
| | மாதாந்திர வகுப்பு குழு தலைவரை தேர்ந்தெடுப்பது மற்றும் மதிப்பெண் பலகையில் மதிபெண்களை பதிவேற்றுவது. | | | | | | | | | | |
| | மன்ற செயல்பாடுகள் மற்றும் கலைத் திருவிழா செயல்பாடுகள் | | | | | | | | | | |
| | ஆண்டு விழா | | | | | | | | | | |

இணைப்பு - 7 இணைப்புகள்

Scanned with OKEN Scanner

இச்செயல்முறைகளை அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை உடன் அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

சி.சோ
01.07.25

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

முதன்மைக் கல்வி அலுவலகம்,

அனைத்து மாவட்டங்கள்.

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–06.
3. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை–06.
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–06.
5. இயக்குநர், தொடக்ககல்வி இயக்ககம், சென்னை –06(உரிய தொடர் நடவடிக்கைக்காக)

Scanned with OKEN Scanner

இணைப்புகள்

இணைப்பு 1: QR குறியீடு – மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பின் கையேடு

Scanned with OKEN Scanner

இணைப்பு 2: மகிழ் முற்றம் குழு அமைப்பு பதவியேற்பு விழா மாதிரி நிகழ்ச்சி நிரல்


# மகிழ் முற்றம் குழு அமைப்பு பதவியேற்பு விழா மாதிரி நிகழ்ச்சி நிரல்

| வ எண் | நிகழ்வு | பொறுப்பாளர் |
|---|---|---|
| 1 | தமிழ்த்தாய் வாழ்த்து | மாணவர்கள் |
| 2 | வரவேற்புரை | தலைமை ஆசிரியர் |
| 3 | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (HSIC) பதவியேற்பு | தலைமை ஆசிரியர் |
| 4 | குழு அமைப்பு பற்றிய அறிமுகம் | குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (HSIC) |
| 5 | மதிப்பீட்டுப் பலகை - திறப்பு விழா | தலைமை விருந்தினர்/ தலைமை ஆசிரியர் |
| 6 | குழுத் தலைவருக்கு கொடி வழங்குதல் | SMC தலைவர் / உறுப்பினர் |
| 7 | குழுத் தலைவர்கள் பதவி ஏற்பு செய்தல் | குழுப் பொறுப்பாசிரியர்(HHT) |
| 8 | குழுத் தலைவர்கள் குழுவாக உறுதிமொழி எடுத்தல் | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்(HSIC) |
| 9 | குழுப் பொறுப்பாசிரியர்கள்(HHT) பதவியேற்பு | குழுத் தலைவர்கள் (House Captains) |
| 10 | குழுப் புகைப்படம் எடுத்தல் | |
| 11 | நன்றியுரை | தெரிவு செய்யப்பட்ட குழுத் தலைவர் |
| 12 | நாட்டுப்பண் | மாணவர்கள் |

Scanned with OKEN Scanner

இணைப்பு 3: மகிழ் முற்றம் நோக்கங்கள்




Scanned with OKEN Scanner

இணைப்பு 4: மகிழ் முற்றம் மாணவர் குழு பள்ளி அளவிலான மதிப்பெண் அட்டவணை

மகிழ் முற்றம்

பள்ளிக் கல்வித் துறை , தமிழ்நாடு அரசு

மகிழ் முற்றம் மதிப்பெண் பலகை (HOUSE SYSTEM SCOREBOARD)

| | | | |
|---|---|---|---|
| பள்ளியின் பெயர் School Name | | தலைமை ஆசிரியர் Headmaster | |
| மாதம், வருடம் Month, Year | | வெற்றிபெற்ற குழு House of the month | |

| செயல்பாடுகள் (Activities) | மதிப்பெண்கள் (Scores) | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்த மதிப்பெண்கள் (Total Score) | | | | | |

மகிழ் முற்றம்

பள்ளிக் கல்வித் துறை , தமிழ்நாடு அரசு

மகிழ் முற்றம் வகுப்பறை மதிப்பெண் பலகை
(HOUSE SYSTEM CLASS ROOM SCOREBOARD)

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு மற்றும் பிரிவின் பெயர் Class & section | | வகுப்பு ஆசிரியர் Class Teacher | |
| மாதம், வருடம் Month, Year | | வெற்றிபெற்ற குழு House of the month | |

| செயல்பாடுகள் (Activities) | மதிப்பெண்கள் (Scores) | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்த மதிப்பெண்கள் (Total Score) | | | | | |

Scanned with OKEN Scanner

இணைப்பு 5: மகிழ் முற்றம் மாணவர் குழு வகுப்பறை அளவிலான மதிப்பெண் அட்டவணை

இணைப்பு 6: மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பின் வகுப்புக் குழு தலைவரின் மாதிரி மதிப்பெண் பதிவிடும் படிவம்

மகிழ் முற்றம்

பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு அரசு

மகிழ் முற்றம் வகுப்பறை மதிப்பெண் பலகை
(HOUSE SYSTEM CLASS ROOM SCOREBOARD)

| குழு பெயர்: House Name: | | குழு வகுப்புத் தலைவர் பெயர்: House Class Leader Name: | | Month: மாதம்: | |
|---|---|---|---|---|---|

| குழு உறுப்பினர்கள் (House Members) | தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பறை செயல்பாடுகள் (எ.கா: 1. வீட்டுப்பாடம் முடித்தல், 2. நகங்களை பராமரித்தல், 3. நல்ல பண்புகளை கடைபிடித்தல் போன்றவை) **Chosen Classroom activities** (eg: 1. homework completion, 2. Proper nail grooming, 3. Practicing positive values etc) | | | மொத்த மதிப்பெண்கள் (Total Score) |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | |
| | | | | |

Scanned with OKEN Scanner

இணைப்பு 7: 2024 - 25 வருடத்தின் வெற்றிக்குழு (House of the Year)

